FORM NO. 124
JUDICIAL MAGISTRATE NO:II COURT– SATTUR
JUDGEMENT IN CALENDER CASE NO **446/2022**
ON THE FILE OF JUDICIAL MAGISTRATE NO:II, COURT – SATTUR

| | |
|---|---|
| Complaint | அரசுக்காக:– காவல் உதவி ஆய்வாளர், வெம்பக்கோட்டை காவல் நிலையம். (குற்ற எண்.141/2022) |
| Accused | திரு.பழனிச்சாமி, த/பெ.திரு.பாண்டியன். |
| Offence | குற்றம்சாட்டப்பட்டது :– இ.த.ச பிரிவுகள் 294(b), 352 & 4 of TNPHW Act<br>குற்றச்சாட்டு வனையப்பட்டது:– இ.த.ச பிரிவுகள் 294(b), 352 & 4 of TNPHW Act |
| Finding | முடிவில், இ.த.ச. பிரிவுகள் 294(பி), 352 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகளுக்கு எதிரி குற்றவாளி என்று கு.வி.மு.ச. பிரிவு 248(2)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| Sentence | எதிரிக்கு இ.த.ச. பிரிவு 294(பி)ன் கீழான குற்றத்திற்கு ரூ.10,000/–மும், பிரிவு 352ன் கீழான குற்றத்திற்கு ரூ.500/–ம் அபராதமாகவும், தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு நீதிமன்றம் கலையும் வரை சிறைத் தண்டனை மற்றும் ரூபாய் ரூ.10,000/–மும் அபராதமும் விதித்துத் தண்டனை அளிக்கப்படுகிறது. |

| Description of the Accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Sl. No. (1) | Name (2) | Father's Name/ Husband's Name (3) | Caste or race | Occupation (4) | Residence (5) | age (6) |
| | பழனிச்சாமி | பாண்டியன் | இந்து | தொழிலாளி | அம்மையார்பட்டி | 48 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Occurrence (7) | Complaint (8) | Apprehension of appearance (9) | Release on Bail (10) | Commencement of trail (12) | Close of Trial (13) | Sentence or Order (14) | Explanation of delay (16) |
| 21.04.2022 | 22.04.2022 | 22.04.2022 | 24.04.2024 | 28.02.2023 | 06.05.2026 | 07.05.2026 | |

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் :– 22.11.2022
குற்ற இறுதி அறிக்கை கோப்புக்கு எடுத்த நாள் :– 28.11.2022
இதன் நகல் :– மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.05.07 14:37:29 +0530

Judicial Magistrate, No.II Sattur

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
முன்னிலை : திரு. சா. வரதராஜன், B.A.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்
2026 ஆம் ஆண்டு, மே மாதம் 07 ஆம் நாள் வியாழக்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண் 446/2022
*****

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். | அரசுக்காக,காவல் உதவி ஆய்வாளர், வெம்பக்கோட்டை காவல் நிலையம். (குற்ற எண்.141/2022) |
| 2. | எதிரியின் பெயர் (Name) | திரு.பழனிச்சாமி (வயது 48),<br>த/பெ.திரு.பாண்டியன்,<br>முதலியார் வடக்குத்தெரு,<br>அம்மையார்பட்டி. |
| 3. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 21.04.2022 |
| 8. | புகார் தேதி (Complaint) | 22.04.2022 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி | 22.04.2022 |
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 24.04.2024 |
| 11. | Commitment | |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 28.02.2023 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி | 06.05.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | இ.த.ச. பிரிவுகள் 294(பி), 352 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகளுக்கு எதிரி குற்றவாளி என்று கு.வி.மு.ச. பிரிவு 248(2)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>எதிரிக்கு இ.த.ச. பிரிவு 294(பி)ன் கீழான குற்றத்திற்கு ரூ.10,000/–மும், பிரிவு 352 ன் கீழான குற்றத்திற்கு ரூ.500/–மும், தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு 7 நாட்கள் சாதாரணச் சிறைத் தண்டனையும், ரூபாய் ரூ.10,000/–மும் அபராதமும் விதித்துத் தண்டனை அளிக்கப்படுகிறது. |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு | எதிரிக்கு தீர்ப்பு நகல் இலவசமாக வழங்கப்பட்டது. |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் காலதாமதம். |



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.05.07 14:37:40 +0530

இவ்வழக்கானது என் முன்பு 06.05.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.L.முரளி, B.Com., B.L., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

**1. <u>குற்றச்சாட்டு</u> :–**

**1.1.** 21.04.2022ம் தேதி மாலை 05.00 மணியளவில் நிகழ்நிலை புகார்தாரர் அவரது வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது, நிகழ்நிலை புகார்தாரரின் கணவர் எதிரி பழனிச்சாமி குடிப்பதற்கு பணம் கேட்டுள்ளார். அதற்கு நிகழ்நிலை புகார்தாரர் தன்னிடம் பணம் இல்லை என்று சொல்லியுள்ளார். அப்போது நிகழ்நிலை புகார்தாரரின் கணவர், "நான் பணம் கேட்டால் கொடுக்காமல் யாருக்குடி கொடுக்கப்போற தேவிடியா முண்ட கண்டாரஓழி" என அசிங்கமாகப் பேசி நிகழ்நிலை புகார்தாரரின் தலைமுடியைப் பிடித்து, கையால் நிகழ்நிலை புகார்தாரரின் முதுகில் மாறி மாறி அடித்துள்ளார். எனவே பொது இடத்தில் வைத்து நிகழ்நிலை புகார்தாரரை அசிங்கமாகப் பேசி, தலைமுடியைப் பிடித்து, கையால் அடித்து நிகழ்நிலை புகார்தாரருக்கு மன உளைச்சலும் அருவருப்பும் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது பிரிவுகள் 294(b), 352 இ.த.ச & 4 of TNPHW Act இன் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல்</u> :–**

இவ்வழக்கில், எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் கீழ் அவருக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3. <u>கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 ன் கீழ் விசாரணை</u> :–**

எதிரி மீது பிரிவுகள் 294(b), 352 இ.த.ச & 4 of TNPHW Act இன் கீழான குற்றங்களுக்கு குற்றச்சாட்டுக்கள் வனைய போதுமான முகத்தோற்ற சான்றுகள் இருந்ததால், எதிரி மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்ற சாராம்ச சங்கதிகள் குறித்து அவரிடம் விளக்கி கூறிய போது, எதிரி பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.07 14:37:45 +0530

**4. <u>அரசு தரப்பு சாட்சிகள் :–</u>**

பட்டியல் சாட்சிகளில் இருந்து 5 நபர்கள் அ.சா.1 முதல் அ.சா.5 வரை அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு :–</u>**

**5.1.** 21.04.2022–ஆம் தேதி மாலை நேரத்தில், அ.சா.1 – ராஜேஸ்வரி அவருடைய வீட்டில் இருந்தபோது, அவருடைய கணவரான இவ்வழக்கின் எதிரி பழனிச்சாமி குடித்துவிட்டு வந்து, மேலும் குடிப்பதற்குப் பணம் கேட்டார். அ.சா.1 – ராஜேஸ்வரியிடம் பணம் இல்லாததால் அவர் கொடுக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த எதிரி பழனிச்சாமி, அ.சா.1 – ராஜேஸ்வரியின் தலைமுடியைப் பிடித்து இழுத்துக் கையால் குத்தினார். அதைத் தட்டிக் கேட்க வந்த அ.சா.2 – திருமலை குமரன் மற்றும் அ.சா.3 – சரவணகுமார் ஆகிய இருவரையும் பார்த்து, "மயித்த புடுங்க எங்க வீட்டுக்கு வர்ற?" என்று தகாத வார்த்தைகளால் திட்டியும், அ.சா.1 – ராஜேஸ்வரியைப் பார்த்துத் தெருவில் வைத்து "தேவிடியாக கூதி மகளே, பலவட்ர கூதி மகளே துட்டு குடுடீ தேவிடியா" என்றும் ஆபாசமாகத் திட்டினார். இந்த செயலால் அ.சா.1 – ராஜேஸ்வரி தனக்கு கை கால் ஓடவில்லை என்று கூறுகிறார்.

**5.2.** இச்சம்பவம் குறித்து எதிரி பழனிச்சாமி மீது அ.சா.1 – ராஜேஸ்வரி, வெம்பக்கோட்டை காவல் நிலையத்திற்கு 22.04.2022–ஆம் தேதி காலை 10:45 மணிக்குச் சென்று, அங்கு பணியில் இருந்த உதவி ஆய்வாளர் அ.சா.5 – வேலுச்சாமியிடம் புகார் மனு (அ.சா.ஆ.1) கொடுத்தார். அதன் அடிப்படையில் குற்ற எண்: 141/2022–இல் இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323 மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு (அ.சா.ஆ.3) செய்யப்பட்டது. உதவி ஆய்வாளர் அ.சா.5 – வேலுச்சாமி வழக்கைப் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடத்திற்குச் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் (அ.சா.ஆ.2) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.4) தயார் செய்தார். அவர் சாட்சிகளைத் தனித்தனியாக விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார்.

**5.3.** அ.சா.1 – ராஜேஸ்வரிக்குக் காயம் ஏதும் இல்லை என்பதால், வழக்கின் சட்டப்பிரிவை இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323 மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் என்பதிலிருந்து பிரிவுகள் 294(b), 352 மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழான குற்றங்களாக மாற்றம் செய்து, அதே குற்றச்சாட்டுகளுக்காக எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.07 14:37:51 +0530

6. <u>கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) கீழ் விசாரணை</u> :–

**6.1.** எதிரிக்கு எதிராக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சியங்களையும் சூழ்நிலைகளையும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313–இன் கீழ் தொகுத்து எதிரியிடம் விளக்கி கேட்டபோது, அ.சா.1 – ராஜேஸ்வரி என்னுடைய மனைவி என்றும், தான் பத்து நபர்களை வைத்து வேலை வாங்குவதால் அ.சா.1 – ராஜேஸ்வரியிடம் பணம் கேட்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்றும், அ.சா.2 – திருமலை குமரன் மற்றும் அ.சா.3 – சரவணகுமார் தன்னுடைய வீட்டிற்கு வரவில்லை என்றும், சாட்சிகள் கூறியது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், பட்டாசுத் தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்ற அ.சா.1 – ராஜேஸ்வரியை தான் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள் என்றும் கூறினார்.

**6.2.** மேலும், அ.சா.3 – சரவணகுமார் தன்னிடம் ரூபாய் 2,60,000/– கடன் வாங்கியுள்ளார் என்றும், அந்தத் தொகையைத் திரும்பக் கேட்டதற்காகத்தான் என் மீது இவ்வழக்குப் பொய்யாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அ.சா.1 – ராஜேஸ்வரி தன் மீது புகார் கொடுக்கவில்லை; அ.சா.2 – திருமலை குமரனும் அ.சா.3 – சரவணகுமாரும் தான் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தார்கள் என்றும், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் அங்கு போலீசார் வரவில்லை என்றும், அ.சா.2 – திருமலை குமரனின் மகள் சாத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வேலை செய்வதால், அவருடைய அழுத்தத்தின் பெயரிலேயே இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரி விளக்கமளித்துள்ளார்.

**6.3.** எதிரி தரப்பில் சாட்சியங்கள் இருப்பதாகக் கூறப்பட்ட போதிலும், எவரும் விசாரணை செய்யப்படவில்லை.

7. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>:–

எதிரி மீது பிரிவுகள் 294(b), 352 இ.த.ச & 4 of TNPHW Act இன் கீழ் வணைந்துள்ள குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

8. <u>சாட்சியங்கள் மதிப்பீடு</u> :–

**8.1.** இவ்வழக்கில், சம்பவம் தொடர்பாக ராஜேஸ்வரி தன்னுடைய முதல் விசாரணையில், 21.04.2022–ஆம் தேதி மாலை நேரத்தில் தன்னுடைய வீட்டில் வைத்து, தன்னுடைய கணவரான இவ்வழக்கு எதிரி பழனிச்சாமி குடிப்பதற்குப் பணம் கேட்டதாகவும், பணம் கொடுக்காததால் தனது தலைமுடியைப் பிடித்து இழுத்துக் கையால் குத்தியதாகவும்,



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.07 14:37:55 +0530

அதைத் தட்டிக் கேட்க வந்த தன்னுடைய சித்தப்பா அ.சா.2 – திருமலை குமரனையும், சகோதரர் அ.சா.3 – சரவணகுமாரையும் எதிரி திட்டியதாகவும், தன்னை ஆபாசமான வார்த்தைகளால் திட்டியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய சாட்சியத்தை ஒத்திசைக்கும் வகையில் அ.சா.2 – திருமலை குமரனும், அ.சா.3 – சரவணகுமாரும் சாட்சியம் அளித்துள்ளார்கள். இவர்களுடைய சாட்சியம் நம்பத்தகுந்ததா? என்பது தற்போது பரிசீலனை செய்ய வேண்டிய பொருண்மைகளாக உள்ளன.

**8.2.** அ.சா.1 – ராஜேஸ்வரி மற்றும் அ.சா.3 – சரவணகுமார் ஆகிய இருவரும் அவர்களின் சாட்சியங்களில், வழக்கு சம்பவத்தின் போது எதிரி அ.சா.1 – ராஜேஸ்வரியைப் பார்த்து "தேவிடியா கூதி மகளே" என்றும் "பலவட்ர கூதி மகளே" என்றும் பேசியதாகக் கூறியுள்ளனர். அவர்கள் இருவரும் அளித்துள்ள சாட்சியத்தை, அ.சா.1 – ராஜேஸ்வரி இந்த வழக்கில் கொடுத்துள்ள புகார் மனுவில் (அ.சா.ஆ.1) உள்ள சங்கதிகள் உறுதி செய்கின்றன. அதாவது, இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள புகார் மனுவிலும் (அ.சா.ஆ.1), எதிரி அ.சா.1 – ராஜேஸ்வரியை "தேவிடியா முண்ட கண்டாரோலி" என்று அசிங்கமாகப் பேசி, தலைமுடியைப் பிடித்து கையால் முதுகில் மாறி மாறி அடித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**8.3.** சாட்சிகள் அ.சா.2 – திருமலை குமரன் மற்றும் அ.சா.3 – சரவணகுமார் ஆகிய இருவரும் அ.சா.1 – ராஜேஸ்வரியின் நெருங்கிய உறவினர்கள் என்றும், அவர்கள் குடும்பத்திற்கு எதிரி கொடுத்த கடன் தொகையைத் திருப்பி கேட்டதற்காக எதிரி மீது இந்த வழக்கு புகாரைப் பொய்யாகக் கொடுத்துள்ளார்கள் என்றும் எதிரி தரப்பில் வாதிடப்பட்டது. அதற்கு அவர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட பிரதான வாதமானது, சாட்சிகள் அ.சா.2 – திருமலை குமரன் மற்றும் அ.சா.3 – சரவணகுமார் ஆகியோரின் வீடு எதிரி இருக்கும் வீட்டிற்கு அருகில் இல்லை என்று சாட்சிகள் கூறிய விபரங்கள் சுட்டிக்காட்டப்பட்டது.

**8.4.** ஆனால், அ.சா.2 – திருமலை குமரன் அவருடைய குறுக்கு விசாரணையின் 6 வது பத்தியில், தன்னுடைய வீடும் எதிரியின் வீடும் அருகருகேதான் இருக்கிறது என்றும், நடந்து சென்றால் சுமார் ஒரு நிமிடத்தில் சென்று விடலாம் என்றும், எதிரியின் வீட்டிலிருந்து சத்தம் போட்டால் எங்கள் வீட்டில் கேட்கும் என்றும் கூறியுள்ளார். அதேபோல், அ.சா.3 – சரவணகுமார் அவருடைய சாட்சியத்தில், அவர் வழக்கு சம்பவத்தைத் தன்னுடைய தங்கை வீட்டிலிருந்து பார்த்ததாகவும், அது எதிரியின் வீட்டிற்கு அருகே இருக்கிறது என்றும் கூறியுள்ளார். மேற்படி இரண்டு சாட்சிகளும் பொய் சாட்சியம் அளிக்கிறார்கள் என்று கூறத்தக்க வகையில், அவர்களின் குறுக்கு விசாரணையில் இருந்து பெரிய அளவிலான முரண்பாடு எதுவும் வெளிப்படவில்லை. மேலும், அவர்கள் கூறிய தூரத்தில் சம்பவ இடமும்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.07 14:38:00 +0530

சாட்சிகளின் வீடும் இல்லை என்று எதிரி தரப்பில் மறுக்கவும் இல்லை, முரண்பட்ட சாட்சியத்தை முன்னிலைப்படுத்தவும் இல்லை.

**8.5.** அ.சா.1 – ராஜேஸ்வரி மற்றும் அ.சா.3 – சரவணகுமார் ஆகிய இருவரும் அவர்களின் குறுக்கு விசாரணையில், வழக்கு சம்பவம் நடைபெற்ற உடனேயே சம்பவ இடத்திற்கு போலீசார் வந்துவிட்டார்கள் என்று எதிரி தரப்பில் கேட்கப்பட்ட கருத்துரு கேள்விக்கு நேர்மறையான பதிலை அளித்துள்ளார்கள். இந்தக் கேள்வி மற்றும் பதிலிலிருந்து, அந்த இடத்தில் ஏதோ ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது என்பதும், அதனால் அந்த சம்பவம் பற்றி தெரிந்து போலீசார் சம்பவ இடத்திற்கு வந்துள்ளார்கள் என்பதும் உறுதியாகிறது. அது என்ன சம்பவம் என்று எதிரி தரப்பில் வேறு வகையான விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை.

**8.6.** குறிப்பாக, அ.சா.1 – ராஜேஸ்வரியை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, "வழக்கு சம்பவம் நடைபெறும்போது யாரோ போலீசாருக்கு தகவல் கூறி போலீசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான்", "அப்பொழுது போலீசார் என்னிடம் என்ன நடந்தது என்று விசாரணை செய்து எழுதி வாங்கிச் சென்றார்கள் என்றால் சரிதான்", "அப்பொழுது போலீசார் என்னிடமும் என்னுடைய கணவரிடமும் இது குடும்பப் பிரச்சனை என்றும் சண்டை போடாமல் இருங்கள் என்றும் அறிவுரை கூறிவிட்டுச் சென்றார்கள் என்றால் சரிதான்" என்று கேள்விகள் கேட்கப்பட்டு நேர்மறையான பதிலும் பெறப்பட்டுள்ளது. மேலும், அ.சா.1 – ராஜேஸ்வரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு, காவல் நிலையத்தில் வைத்தும் போலீசார் "இது குடும்பப் பிரச்சனை என்றும் சமரசமாகச் செல்லுங்கள்" என்றும் கூறினார்கள் என்று கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. இது, அ.சா.1 – ராஜேஸ்வரி, அ.சா.2 – திருமலை குமரன் மற்றும் அ.சா.3 – சரவணகுமார் ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளது போல் வழக்கு சம்பவம் நடைபெற்றுள்ளது என்பதை மேலும் உறுதி செய்யக்கூடிய வகையில் அமைகிறது.

**8.7.** இந்த வழக்குச் சம்பவத்திற்குப் பிறகு, அ.சா.1 – ராஜேஸ்வரியை அவருடைய பெற்றோர் வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டதாக அ.சா.2 – திருமலை குமரன் அவருடைய சாட்சியத்தில் கூறியுள்ளார். அ.சா.1 – ராஜேஸ்வரி அவருடைய சாட்சியத்தில், அவர் தற்போது தன்னுடைய அம்மா வீட்டில் வசித்து வருவதாகக் கூறியுள்ளார். இது தொடர்பாகச் அ.சா.3 – சரவணகுமாரிடம் குறுக்கு விசாரணையில் கேள்வி எழுப்பியபோது, வழக்கு சம்பவம் நடைபெறும் தேதிக்கு முன்பு வரை எதிரியும் அ.சா.1 – ராஜேஸ்வரியும் ஒன்றாகத்தான் வாழ்ந்து வந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். இது தொடர்பாக எதிரியின் மகளை விசாரித்தால் தெரியும் என்று எதிரி தரப்பில் கருத்துரு கேள்வி முன்வைக்கப்பட்ட போதிலும், தன்னுடைய மகளை எதிரி தன் தரப்பு சாட்சியமாக விசாரிக்கவில்லை.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.07 14:38:04 +0530

**8.8.** எதிரியை குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 313–ன் கீழ் விசாரணை செய்தபோது, "பட்டாசுத் தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்றிருந்த அ.சா.1 – ராஜேஸ்வரியை வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள்" என்று விளக்கம் அளித்துள்ளார். ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டது போல், சம்பவம் நடைபெற்ற உடனேயே அங்கு போலீசார் சென்றார்கள் என்பது சாட்சியங்கள் மூலம் தெரியவரக்கூடிய நிலையில், எவ்விதமான காரணமும் இல்லாமல் தன்னுடைய கணவரின் வீட்டிலிருந்து தன்னுடைய தாயார் வீட்டிற்கு அ.சா.1 – ராஜேஸ்வரி செல்ல வேறு காரணங்கள் இருக்கிறது என்று கூறத்தக்க வகையில் எவ்விதமான சூழ்நிலைகளும் சம்பவங்களும் நடைபெற்றதாக எதிரி தரப்பில் கூறவில்லை. எனவே, இந்தச் சூழ்நிலையும் வழக்கு சம்பவம் நடைபெற்றது என்பதை உறுதி செய்யக்கூடிய வகையிலேயே இருக்கிறது.

**8.9.** கொடுத்த கடன் தொகையைத் திருப்பித் கேட்டதால் தான் பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று எதிரி தரப்பில் வாதிடப்பட்ட போதும், அது தொடர்பாகச் சாட்சிகளிடமிருந்து வழக்குச் சம்பவத்தின் போது எதிரி கடன் தொகையைத் திருப்பிக் கேட்டார் என்பதற்கான சாட்சியங்களையோ அல்லது சூழ்நிலைகளையோ எதிரி தரப்பில் வெளிக்கொணரவில்லை. அதேபோல், அது தொடர்பான சாட்சியங்களையும் எதிரி தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. ஏற்கனவே கூறியது போல், சம்பவ இடத்திற்கு அரசு தரப்பில் முறையிடப்பட்டுள்ள காரணத்தைத் தவிர, வேறு என்ன காரணத்திற்காகப் போலீசார் சம்பவம் நடைபெற்ற உடனே வந்தார்கள் என்பது தொடர்பாகவும் எவ்விதமான சாட்சியமும் எதிரி தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**8.10.** இந்த வழக்கில் 21.04.2022ம் தேதி மாலை நடைப்பெற்றதாக கூறும் சம்பவத்திற்கு மறுநாள் தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று வாதிடப்பட்டது. ஆனால், சம்பவம் நடைப்பெற்ற உடனே சம்பவ இடத்திற்கு போலீசார் சென்று விசாரணை செய்து அதை எழுதிக்கொண்டார்கள் என்று அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். எனவே, இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபரால் கால தாமதம் ஏற்படவில்லை. மேலும், இந்த வழக்கு எதிரி மீது பொய்யாக போடப்பட்டுள்ளது, அல்லது மிகைப்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறத்தக்க வகையிலும் எவ்விதமான சாட்சியங்களும், சூழ்நிலைகளும் இல்லாத நிலையில், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் எவ்வகையிலும் அரசு தரப்பு வழக்கைப் பாதிப்பதாக இல்லை. மேலும், காலதாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.07 14:38:09 +0530

என்பது மட்டுமே அரசு தரப்பு வழக்கை பாதிக்ககூடியதல்ல என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் கூறியுள்ளது[1].

**8.11.** அ.சா.1 – ராஜேஸ்வரி அவருடைய சாட்சியத்தில் எதிரி தன்னைத் தலைமுடியைப் பிடித்து கையால் குத்தினார் என்று கூறியுள்ளார். அ.சா.2 – திருமலை குமரன் அவருடைய சாட்சியத்தில் எதிரி பழனிச்சாமி அ.சா.1 – ராஜேஸ்வரியின் தலைமுடியைப் பிடித்து இழுத்து அவரை அடித்தார் என்று கூறியுள்ளார். அ.சா.3 – சரவணகுமார் அவருடைய சாட்சியத்தில் எதிரி அ.சா.1 – ராஜேஸ்வரியின் முதுகில் கையை வைத்து இரண்டு குத்து குத்தினார் என்று கூறியுள்ளார். இவ்வாறு எதிரி அ.சா.1 – ராஜேஸ்வரியை எவ்வாறு தாக்கினார் என்று சாட்சிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கூறியதாக எதிரி தரப்பில் வாதிடப்பட்டது. ஆனால், அவை அனைத்தும் வழக்குச் சம்பவத்தின் போது எதிரி அ.சா.1 – ராஜேஸ்வரியை கையால் தாக்கியதையே குறிக்கிறது. இது ஒரு பெரிய அளவிலான முரண்பாடு என்று எடுத்துக் கொள்ள முடியாது.

**8.12.** மேற்படி மூன்று நபர்களின் சாட்சியமும் மற்ற வகையில் சந்தேகத்திற்கு உள்ளாக்கப்படாத நிலையில், இந்தச் சிறிய அளவிலான முரண்பாடு அரசு தரப்பு வழக்கை பாதிப்பதாக இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எதிரி தரப்பில் முன்வைக்கப்பட்ட எதிர்வாதமான, பணம் தொடர்பான பிரச்சனைக்காகத்தான் இந்த வழக்கில் புகார் கொடுக்கப்பட்டது என்பதை உறுதி செய்ய அ.சா.1 – ராஜேஸ்வரியைக் குறுக்கு விசாரணை செய்தபோது, மேற்படி பணம் தொடர்பான பிரச்சனைக்கு பஞ்சாயத்து செய்வதற்காக நாட்டாமை தன்ராஜ் மற்றும் முருகன் ஆகியோர் வந்தார்கள் என்றும், அவர்கள் சமரசம் பேசினார்கள் என்றும் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது.

---

1 The Hon'ble IN THE SUPREME COURT OF INDIA : HARIPRASAD @ KISHAN SAHU //Vs// STATE OF CHHATTISGARH : CRIMINAL APPEAL No. 1182 OF 2012, NOVEMBER 7th, 2023 : 2023 INSC 986

9. It cannot be gainsaid that the First Information Report in a criminal case is an extremely vital and valuable piece of evidence for the purpose of corroborating the oral evidence adduced during the course of the trial. The object of insisting upon prompt lodging of the report to the police in respect of the commission of an offence is to obtain early information regarding the circumstances in which the crime was committed, the names of actual culprits and the part played by them as well as names of the eye witnesses present at the scene of occurrence (Thulia Kali vs. The State of Tamil Nadu; 1972 (3) SCC 393). It is also an equally settled legal position that the receipt and recording of information report by the police is not a condition precedent to set into motion a criminal investigation (The King Emperor vs. Khawaja Nazir Ahmad; AIR 1945 PC 18). The First Information Report under Section 154 of Cr.PC, as such could not be treated as a substantive piece of evidence it can only be used to corroborate or contradict the informant's evidence in the Court. As held by three-Judge Bench of this Court (Apren Joseph alias current Kunjukunju & Ors. Vs. State of Kerela; 1973 (3) SCC 114), FIR is very useful if recorded before there is time and opportunity to embellish, or before the informant's memory fades. Undue or unreasonable delay in lodging the FIR, therefore, may give rise to suspicion which put the Court on guard to look for the possible motive and the explanation for the delay and consider its effect on the trustworthiness or otherwise of the prosecution version.

10. Of course, the delay in lodging an FIR by itself cannot be regarded as the sufficient ground to draw an adverse inference against the prosecution case, nor could it be treated as fatal to the case of prosecution. The Court has to ascertain the causes for the delay, having regard to the facts and circumstances of the case. If the causes are not attributable to any effort to concoct a version, mere delay by itself would not be fatal to the case of prosecution.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.07 14:38:12 +0530

**8.13.** ஆனால், அவர்கள் அந்தப் பிரச்சனைக்காகச் சமரசம் பேச வரவில்லை என்றும், இந்த வழக்கின் எதிரியான தன் கணவர் தன்னிடம் மிகவும் சண்டையிட்டுக் கொண்டிருந்ததால், தன் மகன் முருகனைத் தன் கணவரிடம் பேசுவதற்காக அழைத்து வந்தார் என்றும் விளக்கம் அளித்துள்ளார். இது தொடர்பாகத் தன்ராஜ் மற்றும் முருகன் ஆகியோரை எதிரி தரப்பில் சாட்சியாக விசாரணை செய்தால், அவர்கள் எதற்காகப் பஞ்சாயத்து பேச வந்தார்கள் என்ற விவரம் தெரியும் என்று கருத்துருக் கேள்வி (Suggestion) கேட்கப்பட்ட போதிலும், எதிரி தரப்பில் அவர்களைச் சாட்சியாக விசாரிக்கவில்லை.

**8.14.** அதேபோல், வழக்குச் சம்பவம் நடைபெற்றதா? இல்லையா? என்பதை எதிரியின் மூத்த மகளை விசாரித்தால் தெரியும் என்று அ.சா.2 – திருமலை குமரனிடம் எதிரி தரப்பில் கேள்வி முன்வைக்கப்பட்ட போதிலும், அவரையும் இந்த வழக்கில் எதிரி தரப்புச் சாட்சியாக விசாரிக்கவில்லை. இங்கு குறிப்பிட்டு கூறவேண்டியது என்னவென்றால், அ.சா.2 அவருடைய குறுக்கு விசாரணையில், அ.சா.1 க்கும் அவருடைய மூத்த மகளுக்கும் தற்போது பேச்சுவார்த்தை கிடையாது என்றும், எதிரியும் அவருடைய மூத்த மகளும் பேசிக்கொள்வார்கள் என்றும் கருத்துரு கேள்விகளுக்கு நேர்மறையான பதிலை அளித்துள்ளார். எனவே, வழக்குச் சம்பவம் நடைபெறவில்லை என்பதைக் காண்பிக்க எதிரி தரப்பில் சாட்சிகள் இருந்தபோதிலும், அவர்களை முன்னிலைப்படுத்தத் தவறியது எதிரியின் எதிர்வாதத்தைப் பாதிப்பதாக இருக்கிறது.

**8.15.** இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 – வேலுச்சாமி, தன் சாட்சியத்தில், அ.சா.1 – ராஜேஸ்வரிக்கு காயம் எதுவும் இல்லை என்பதாலும், அவர் மருத்துவமனைக்குச் செல்லவில்லை என்பதாலும், வழக்கின் சட்டப்பிரிவை இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 323–லிருந்து பிரிவு 352–ஆக மற்ற குற்றங்களுடன் சேர்த்து மாற்றியதாகக் கூறியுள்ளார். இந்தச் சூழ்நிலையில், இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள புகாரில், அ.சா.1 – ராஜேஸ்வரி மருத்துவமனைக்குச் சிகிச்சைக்குச் சென்றதாகக் குறிப்பிட்டுக்கூறாத நிலையில், அவருடைய முதல் விசாரணை வாக்குமூலத்திலும் அது பற்றி எதுவும் கூறவில்லை.

**8.16.** ஆனால், அவரை குறுக்கு விசாரணை செய்தபோது, வழக்குச் சம்பவத்தின்போது ஏற்பட்ட காயத்திற்குச் செவல்பட்டியில் உள்ள சரவணா மருத்துவமனைக்குச் சென்று ஊசி போட்டுக் கொண்டதாகக் கூறியுள்ளார். அதேபோல் சாட்சிகள் அ.சா.2 – திருமலை குமரன் மற்றும் அ.சா.3 – சரவணகுமார் ஆகிய இருவரும், தங்களின் முதல் விசாரணை சாட்சியங்களிலேயே அ.சா.1 – ராஜேஸ்வரி வழக்குச் சம்பவத்தில் ஏற்பட்ட காயத்திற்குச்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.07 14:38:20 +0530

செவல்பட்டியில் உள்ள சரவணா மருத்துவமனைக்குச் சென்றதாகக் கூறியுள்ளார்கள். வழக்குச் சம்பவம் நடைபெற்ற அன்றைய தினமே மேற்படி மருத்துவமனைக்குச் சிகிச்சைக்குச் சென்றதாகச் சாட்சிகள் மூவரும் கூறியுள்ள நிலையில், அதற்கு மறுநாளே இந்த வழக்கு புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

**8.17.** உண்மையிலேயே சாட்சிகள் கூறியபடி அ.சா.1 – ராஜேஸ்வரி மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றிருந்தால், அதனை இந்த வழக்கு புகாரில் குறிப்பிட்டிருப்பார். அவ்வாறு கூறாததிலிருந்து, அவர் மருத்துவமனைக்குச் சென்றதாகச் சாட்சிகள் கூறுவது மிகைப்படுத்தப்பட்ட சாட்சியமாகவே தெரிகிறது. இருந்த போதிலும், ஒன்றில் பொய் என்றால் அனைத்திலும் பொய் என்ற முதுமொழி இந்திய நீதிமன்றங்களால் அங்கீகரிக்கப்டவில்லை என்பதால் அந்த சாட்சிகளின் நம்பத்தகுந்த சாட்சியங்களை ஒதுக்கித்தள்ள வேண்டிய அவசியமில்லை. அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களில் இருந்து வழக்கு சம்பவத்தின் போது எதிரி அ.சா.1 யை தன்னுடைய கையால் தாக்கியுள்ளார் என்பது நிரூபணமாவதால், எதிரி இ.த.ச. பிரிவு 352 ன் கீழான குற்றத்திற்கு குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8.18.** அ.சா.1 – ராஜேஸ்வரி, அ.சா.2 – திருமலை குமரன் மற்றும் அ.சா.3 – சரவணகுமார் ஆகிய மூவரும் தங்கள் சாட்சியங்களில், எதிரி அ.சா.1 – ராஜேஸ்வரியை ஆபாசமான வார்த்தைகளால் பேசினார் என்று குறிப்பிட்டுச் சாட்சியம் அளித்துள்ளார்கள். அந்தச் சாட்சியம் நம்பக்கூடிய வகையில் இருக்கிறது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. குறிப்பாக அ.சா.1 – ராஜேஸ்வரி தனது சாட்சியத்தில், எதிரி ஆபாசமாகத் தெருவில் வைத்துத் திட்டியதால் தனக்குக் கை கால் ஓடவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் நடுத்தெரு என்பதற்கும், வீட்டின் முன்பு என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்று வாதிடப்பட்டது. ஆனால், அ.சா.1 மற்றும் எதிரியின் வீட்டிற்கு முன்பு தெரு இல்லை என்பது எதிரியின் வழக்கு அல்ல. எனவே, இதை ஒரு முரண்பாடாகவே எடுத்துக்கொள்ள முடியாது.

**8.19.** இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட வேண்டுமெனில், எதிரி பேசிய ஆபாசமான வார்த்தைகளால் அங்கிருந்த மற்ற நபர்களின் எண்ணத்தை மாற்றக்கூடிய வகையிலோ அல்லது அவர்களுக்கு அருவருப்போ, தொந்தரவோ (Annoyance) அல்லது மனக்கஷ்டமோ ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதேபோல், தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழான குற்றம் எழ, ஒரு பெண்ணிற்கு அச்சம்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.07 14:38:24 +0530

அல்லது அவமானம் போன்ற உணர்வை ஒரு ஆண் தன்னுடைய செயல் மூலம் ஏற்படுத்தினாலே போதுமானதாகும்.

**8.20.** இந்த வழக்கில், எதிரி பொது இடத்தில் வைத்துத் தாக்கி ஆபாசமான வார்த்தைகளால் ஏசியதால் தனக்குக் கை கால் ஓடவில்லை என்று அ.சா.1 – ராஜேஸ்வரி அளித்துள்ள சாட்சியத்திலிருந்து, எதிரியின் செயலால் அவருக்குப் பயம் போன்ற ஒருவித உணர்வு ஏற்பட்டுள்ளது என்பதும், எதிரி அ.சா.1 – ராஜேஸ்வரியைத் தாக்கியுள்ளார் என்பதும் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் ஆகிறது. எனவே, இந்த வழக்கில் வழக்குச் சம்பவம் நடைபெற்றது என்பதும், இ.த.ச. பிரிவுகள் 294(பி), 352 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4–ன் கீழான குற்றங்களுக்கு தேவையான உட்கூறுகளும் அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**9. <u>முடிவு</u> :–**

**9.1.** முடிவில், இ.த.ச. பிரிவுகள் 294(பி), 352 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகளுக்கு எதிரி குற்றவாளி என்று கு.வி.மு.ச. பிரிவு 248(2)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**9.2.** எதிரி இந்த வழக்கில் எழுதிக்கொடுத்த பிணை ஆவணங்கள் ரத்து செய்யப்படுகின்றன.

**9.3.** இவ்வழக்கில் வழக்குச் சொத்து ஏதும் இல்லை.

**10. <u>தண்டனை உத்தரவு</u> :–**

**10.1.** இந்த வழக்குக் குற்றம் பெண்ணுக்கு எதிரானது என்பதாலும், வழக்கின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டும், எதிரிக்குக் குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டத்தின் பலன்கள் கிடைக்கக்கூடியதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10.2.** எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை குறித்துக் கேட்டபோது, தான் குற்றம் எதுவும் செய்யவில்லை என்றும், அபராதம் விதித்து தண்டனை வழங்குமாறும் கூறினார். எதிரியின் பதில், வழக்கின் சூழ்நிலை மற்றும் எதிரியின் சமுதாய நிலை ஆகியவை கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டன.

**10.3.** எதிரிக்கு வேறு முன்வழக்கு மற்றும் முன்தண்டனை இருப்பதாக அரசு தரப்பில் கூறப்படவில்லை. இந்த வழக்கு சம்பவம் கணவன் மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேறுபாட்டின் காரணமாக நடைப்பெற்றுள்ளது. வழக்கு சம்பவத்தில் அ.சா.1 க்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. தற்போது இருவரும் தனித்தனியாக வசித்து வருகிறார்கள்.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.07 14:38:29 +0530

இவற்றைப் பரிசீலனை செய்ததன் அடிப்படையில், எதிரிக்கு இ.த.ச. பிரிவு 294(பி)ன் கீழான குற்றத்திற்கு ரூ.10,000/- மற்றும் பிரிவு 352ன் கீழான குற்றத்திற்கு ரூ.500/- என அபராதமும், தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன் கீழான குற்றத்திற்கு நீதிமன்றம் கலையும் வரை சிறைத் தண்டனையும், ரூபாய் 10,000/- அபராதமும் விதித்துத் தண்டனை அளிப்பது நீதியின்பால் சரியானதாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் கருதி அவ்வாறே உத்தரவிடுகிறது.

**10.4.** முடிவில், எதிரிக்கு இ.த.ச. பிரிவு 294(பி)ன் கீழான குற்றத்திற்கு ரூ.10,000/-மும், பிரிவு 352ன் கீழான குற்றத்திற்கு ரூ.500/-ம் அபராதமாகவும், தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு நீதிமன்றம் கலையும் வரை சிறைத் தண்டனை மற்றும் ரூபாய் ரூ.10,000/-மும் அபராதமும் விதித்துத் தண்டனை அளிக்கப்படுகிறது. இ.த.ச. பிரிவுகள் 294(பி) மற்றும் 352ன் கீழான குற்றங்களுக்கான அபராதத் தொகையை எதிரி செலுத்தத் தவறினால், ஒவ்வொரு தவறுகைக்கும் அவர் ஒரு வாரம் சாதாரணச் சிறை தண்டனையும், தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4-ன் கீழான குற்றத்திற்கு கீழான அபராதத்தொகையை செலுத்த தவறினார் 3 மாதங்கள் சாதாரணச் சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராத தொகை ரூ.20,500/- ஆகும்.

**10.5.** எதிரி செலுத்தும் அபராதத் தொகை ரூபாய்.20,500/-யை, இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 - ராஜேஸ்வரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 357ஏ மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 7-A-ன் கீழ், மேல்முறையீட்டு காலத்திற்குப் பிறகு, இழப்பீடாக வழங்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 07.05.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.05.07 14:38:33 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்

## <u>பிற்சேர்க்கை</u>

**<u>1. அரசு தரப்பு சாட்சிகள்</u> :-**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி.ராஜேஸ்வரி |
| அ.சா.2 | திரு.திருமலைக் குமரன் |
| அ.சா.3 | திரு.சரவணகுமார் |
| அ.சா.4 | திரு.பழனிச்சாமி |
| அ.சா.5 | திரு.வேலுச்சாமி (காவல் உதவி ஆய்வாளர்) |

**2. <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :–**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 22.04.2022 | புகார்மனு |
| அ.சா.ஆ.2 | 22.04.2022 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | 22.04.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 22.04.2022 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 23.04.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**3. <u>அரசு தரப்பு சான்று பொருள்</u> :–**இல்லை.

**4. <u>எதிரி தரப்பு சாட்சிகள்</u> :–** இல்லை

**5. <u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u> :–** இல்லை

**6. <u>எதிரி தரப்பு சான்று பொருட்கள்</u> :–** இல்லை

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.07 14:38:46 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
சாத்தூர்

**<u>குறிப்பு</u> :–**

**1.** விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

**2.** சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**3.** தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

**4.** தீர்ப்பு நகல் இலவசமாக எதிரிக்கு வழங்கப்பட்டது.